கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (ஜனவரி-பெப்ரவரி 2018)

# HC/S 2113 Hinduism in India

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி-II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி–I

01. "மறைபொருட் கோட்பாடுகளை வலியுறுத்தும் ஓர் ஆசிரியரின் கீழ் இருந்து சீடன் பெற்றுக்கொண்ட அறிவு உபநிடதம்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
    (i) குருகுலக் கல்வி (08 புள்ளிகள்)
    (ii) ஒழுக்க விழுமியங்கள் (12 புள்ளிகள்)

02. "வட இந்திய வரலாற்றில் குப்தர்காலம் பொற்காலமாகும்." இக்கூற்றினைக் கருத்திற்கொண்டு மேல்வருவனவற்றை ஆராய்க.
    (i) நாணயங்கள் (10 புள்ளிகள்)
    (ii) இலக்கியங்கள் (10 புள்ளிகள்)

03. "தமிழகத்தின் பக்தி நெறியின் மறுமலர்ச்சிக்காலம் எனக்கருதத்தக்க காலம் நாயக்கர் காலம் ஆகும்." இக்கூற்றைக் கருத்திற்கொண்டு மேல்வருவன பெறும் இடத்தினை ஆராய்க.
    (i) மடங்கள் (10 புள்ளிகள்)
    (ii) மதுரை மீனாட்சி அம்மன் கோயில், (10 புள்ளிகள்)

## பகுதி–II

04. "வட இந்திய இந்து சமய வளர்ச்சியில் பக்தி நெறியாளர்களின் வகிபாகம் இன்றியமையாதது." இக்கூற்றினை கபீர்தாசரை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
    (20 புள்ளிகள்)

05. "தமிழக வரலாற்றில் பல்லவர்காலம் பக்தி மயமான வாழ்க்கைக்கு மக்களை ஆற்றுப்படுத்தியுள்ளது." இக்காலப் பகுதியில் மன்னர்களின் பங்கும் பணியும் இன்றியமையாதது. இக்கூற்றினை பரிசீலனை செய்க.
    (20 புள்ளிகள்)

06. விஜய நகர காலத்தில் ஹம்பி நகரக் கோயில்களின் சிறப்புப் பற்றிக் கட்டுரை வரைக.
    (20 புள்ளிகள்)

(ம.ப.பா)

07. மேல்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு குறிப்புரை வரைக.

(i) நடுகல் வழிபாடு (10 புள்ளிகள்)

(ii) ஐவகை நிலமும் - சமய மரபுகளும் (10 புள்ளிகள்)

(iii) பக்தி இயக்கம் (10 புள்ளிகள்)

(iv) வேதங்கள் கூறும் வாழ்வியல் (10 புள்ளிகள்)

*****